[1st September 1970

திரு. எம். எத்திராஜுலு : பழைய பஸ்களில்தான் இந்தப் புகை வருவதாகச் சொல்லப்படுகிறது. புதிய பஸ்களில் இந்த மாதிரி வருவதில்லை. கொஞ்ச காலத்திற்கு முன்பாக வாங்கப்பட்ட பழைய பஸ்களை மாற்றிவிட்டு புதிய பஸ்களையே விடுவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : ஒவ்வொரு பஸ்ஸுக்கும் குறிப்பிட்ட கால அளவு உண்டு. அந்தக் கால அளவு வரையில் அவற்றை உபயோகிக்கவேண்டியிருக்கிறது. அவ்வப்போது பழையவைகளை மாற்றிக்கொண்டுதான் இருக்கிறோம். இப்போதுகூட அரசாங்கம் 70 பஸ்களை வருகிற இரண்டு மாதங்களுக்குள் விடுவதற்கு அனுமதி தந்திருக்கிறது. அதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறோம்.

Tachometers

*68. *Q*—.THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal for the installation of Tachometers and its periodical check-up by the Regional Transport Officers in Heavy Passenger Vehicles to avert accidents ?

விசைமானிகள்

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

விபத்துக்களைத் தவிர்ப்பதற்காக பெரிய அளவுப் பயணி வண்டிகளில் விசைமானிகள் அமைப்பதற்கும், வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகள் அவற்றை அவ்வப்போது பரிசோதனை செய்வதற்குமான செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : இல்லை.

Scavenging Work

*69. *Q*.—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :

(*a*) whether it is a fact that children below 15 years of age are doing scavenging work in Salem and Ramanathanpuram Municipalities; and

(*b*) if so, the action taken by the Government to prevent the child labour ?

துப்புரவு வேலை

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சேலம், ராமநாதபுரம் நகராட்சிகளில், 15 வயதுக்குக் குறைவான சிறுவர்கள் துப்புரவு வேலை செய்கின்றனர் என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், சிறுவர்கள் தொழிலில் ஈடுபடுவதைத் தடுக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கை யாது ?

1st September 1970]

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி ; (அ) இவ்விரு நகராட்சிகளொதிலும் 18 வயதுக்குக் குறைந்த யாரும் நகர சுத்தி வேலைக்கு அமர்த்தப்படவில்லை என்று அரசுக்குக் கிடைத்துள்ள தகவல்களிலிருந்து தெரிகிறது.

(இ) இவ்வினா எழவில்லை. இருப்பினும், எந்தவொரு நகராட்சியிலும் சிறுவர் எவரும் நகர சுத்தி வேலையில் அமர்த்தப்படக்கூடாது என்று அரசு உத்தரவுகள் பிறப்பித்துள்ளது.

Railway Cess Fund

*70. —THIRU A.R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :

(*a*) whether the Thanjavur District Board Railway Cess Fund was utilised from 1st April, 1968 till date ; and

(b) if not, the reasons for the same ?

இரயில்வே செஸ் நிதி

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1968-ஆம் ஆண்டு ஏப்ரல் 1-ஆம் தேதியிலிருந்து இன்று வரை தஞ்சாவூர் மாவட்ட வாரிய இரயில்வே செஸ் நிதி உபயோகப் படுத்தப்பட்டதா ?

(இ) இல்லை எனில், அதன் காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : (அ) இல்லை.

(இ) விளையாட்டரங்கு ஒன்றைக் கட்டுவதற்காக ஒரு லட்சம் ரூபாய் பயன்படுத்துவதற்கு 1968-ம் ஆண்டில் தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் செயற்குறிப்புகளைப் பணிந்தனுப்பினர். மேற்சொன்ன நோக்கத்திற்காக இத்தொகையைப் பயன்படுத்த இப்போதுள்ள விதிகள் அனுமதிக்காத காரணத்தினால் மாவட்ட ஆட்சித் தலைவரின் செயற்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்படவில்லை. திருந்திய செயற்குறிப்புகளை அனுப்புமாறு மாவட்ட ஆட்சித் தலைவரை அரசு கேட்டுள்ளது.

திரு. எம். எத்திராஜுலு : தென்னாற்காடு ஜில்லாவில் அங்கே இருக்கிற கடலூர், விழுப்புரம் போன்ற இடங்களில் எவ்வளவு செஸ் நிதி இருக்கிறது என்பதைக் கூற முடியுமா ?